# DDEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Deposition of Witness of PW10

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபா | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 29th ஜனவரி 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தர்மபுரி மாவட்டம், மாரண்டஹள்ளி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.03.2022 ம் தேதி நான் மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் காவல்உதவி ஆய்வாளர் திரு. ஜான்சன் பால் என்பவர் நிலைய குற்ற எண் 59/2022 சட்டப்பிரிவு 392 இதச ஆக வழக்கு பதிவு செய்து காவல் ஆய்வாளராக ஆகிய எனது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை பெற்று இரவு 20.15 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சி விக்னேஸ்வரன் என்பவர் அடையாளம் காட்ட சாட்சிகள் மதியரசு, பரத்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் நான் உடன் எடுத்த சென்ற டார்ச்லைட் மற்றும் சர்க்குலேட்டர் வெளிச்சத்தின் மூலம் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு சாட்சிகள் செல்வமணி, சக்திவேல், விக்னேஷ்வரன், மதியரசு, பரத்குமார் ஆகிய சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 18.03.2022ம் தேதி சாட்சிகள் சபரிமலை, குருநாதன் ஆகிய சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர்புலன் விசாரணை மேற்க்கொண்டு 29.03.2022 ம் தேதி மதியம் 16.00 மணிக்கு பரிசல்துறை

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.29 17:31:34 +0530

நால்ரோடு இரயில்வே கேட் அருகில் போலீஸாருடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது இருசக்கர வாகனத்தில் வந்த நபர் போலீஸாரை பார்த்ததும் தப்பி போக முயற்சித்தவரை விசாரித்தபோது தனது பெயர் நாகராஜ்(வயது 24) த/பெ. லட்சுமணபெருமாள் புதுக்கோட்டை என்றும் தற்போது கருப்பன்னசாமி கோவில் தெரு, சூரம்பட்டி ஈரோடு என்று கூறியவரை விசாரித்தபோது தானும், தனது உறவினர் பாரதிசெல்வம் என்பவர் TN 69 BH 1300 என்ற மஞ்சள் கலர் டியோ வண்டியில் கடந்த 17.03.2022 ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் 46 புதுார் தீரன் நகர், சாய்பாபா கோவில் அருகில் நடந்து சென்ற பெண்ணிடம் தங்கசெயினை பறித்து சென்ற குற்றத்தை ஒப்புக்கொண்டவரை சாட்சிகள் எபினேசர் மற்றும் விக்னேஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்வதற்கான காரணத்தை கூறி பகல் 14.00 மணிக்கு கைது செய்தும் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 14.30 மணிக்கு பதிவு செய்தும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் "என்னை கூட்டி சென்றார், நானும், பாரதிசெல்வமும் சேர்ந்து ...... அடமானம் வைத்த சூரம்பட்டி SKC ரோடு மணப்புரம் பைனான்சையும், அங்கு அடகு வைத்த இரட்டைவடை செயினையும் அடையாளம் காட்டி" என்று குறிப்பிட்டதின் அடிப்படையில் மேற்படி நான் சாட்சிகளுடன் அங்கு சென்றேன். மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள **அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

3. பின்னர் எதிரி தானாக ஆஜர் செய்த TN 69 BH 1300 என்ற மஞ்சள் டியோ இருசக்கர வாகனத்தை 16.15மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்பு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஈரோடு SKC மெயின் ரோட்டில் உள்ள மணப்புரம் பைனான்ஸ்–க்கு அழைத்து சென்று தான் கொள்ளை அடித்ததாக கூறிய நகையை அடகு வைத்ததாக கூறியதின் பேரில் மணப்புரம் பைனான்ஸ் மேலாளர் அஜீஸ் என்பவரை விசாரிக்க அவர் ஆஜர் செய்த தங்க செயினை எதிரி நாகராஜ் என்பவர் அடையாளம் காட்ட அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிறேன். பின்பு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 29.03.2022 ம் தேதி இரவு 21.00 மணிக்கு எதிரியை நிலையம் கொண்டு வந்து முறைப்படி திரேக சோதனை செய்து பாரா வசம் ஒப்புவித்தும், பின்பு எதிரியை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி உடல்தகுதி சான்று பெற்று 30.03.2022 அன்று அடைப்பு காவல்அறிக்கை தயார் செய்து தக்க வழிக்காவல் மூலம் எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.29 17:31:41 +0530

4. அன்றைய தினமே 29.03.2022 ம் தேதியன்று சாட்சிகள் செல்வமணி, சக்திவேல், குருநாதன் ஆகிய சாட்சிகளை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் நவீன்குமார், அனீஸ், எபினேசர், விக்னேஷ்குமார் ஆகிய சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரி நாகராஜ் என்பவரை அடைப்பு காவல் அறிக்கையுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் தொடர் விசாரணை மேற்கொண்டு 20.09.2022 ம் தேதி மதியம் 13.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் போலீஸாருடன் சோலார் டீ வெண்டிபாளையம் பேரேஜ் ரோடு வாய்க்கால் பாலம் அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது சந்தேகப்படும் படியாக நடந்து வந்த நபரை விசாரிக்க தனது பெயர் பாரதிசெல்வம் த/பெ. லட்சுமணன் அம்மன்கோவில் வீதி, புதுக்கோட்டை என்று கூறியவரை விசாரித்தபோது தானும் தனது உறவினர் நாகராஜ் என்பவரும் சேர்ந்து கடந்த 17.03.2022 ம்தேதி மாலை 4.00 மணியளவில் 46புதுார் 19 ரோடு சாய்பாபா கோவில் அருகே நடந்த சென்ற பெண்ணிடம் தங்கசெயினை பறித்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை 14.00மணிக்கு கைது செய்தும், கைது பற்றி விபரத்தை அவரது உறவினருக்கு தகவல் தெரிவித்தும், 15.00 மணிக்கு எதிரியை முறைப்படி திரேக சோதனை செய்து நிலையம் கொண்டுட வந்து முறைப்படி திரேக சோதனை செய்து பாரா வசம் ஒப்புவித்தேன். பின்பு சாட்சிகள் செல்வமணி, சக்திவேல், குருநாதன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அடைப்பு காவல் அறிக்கை தயார் செய்து எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற அடைப்பு காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

5. வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் அனுப்பி வைத்தேன். **படிவம் 91 (2 எண்ணிக்கைகள்) முறையே அ.சா.ஆ.10, 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனம், 34.600கிராம் எடையுள்ள தங்க செயின் மற்றும் மஞ்சள் கலர் டியோ வாகனத்தின் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் விசாரணை முடித்து எதிரிகள் மீது 09.10.2022 ம் தேதி சட்டபிரிவு 392 இதச ஆக இறுதி அறிக்கை தாக்கல் செய்து அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.29 17:31:46 +0530